பதிவு எண்: M. 6311 ★ டெலிபோன்: 51331 ★ [illegible]: 1953 ★ [illegible] ★ [illegible] 10 [illegible]

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,[illegible]

மலர்: 20] சென்னை: புரட்டாசி 4 (20—9—72) புதன் — வெளியீடு: புரட்டாசி 5 (21—9—72) வியாழன் [இதழ்: 82

கங்கை--காவிரி இணைப்புப் பணி--

ரூ. 20 கோடி செலவாகும்

"கங்கை--காவிரி இணைப்பு வேலைக்கான ஆராய்ச்சிப் பணிகளுக்காக ரூ. 15 கோடியிலிருந்து ரூ. 20 கோடிவரை செலவாகுமெனக் கருதப்படுகிறது"

என்று மத்திய பாசனத் துறை அமைச்சர் கே. எல். ராவ் இங்கு தெரிவித்தார்.

இந்தத் திட்டம் பொருளாதார ரீதியில் மிகுந்த பயன் தராது என்று கூறப்படுவதை அவர் மறுத்தார்.

டெல்லியின் உறுதியற்ற பொருளாதார கொள்கை

தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் அமைச்சர் செ. மாதவன் குற்றச்சாட்டு

புதுடில்லி, செப். 20

"இந்தியாவில் தொழில் முன்னேற்றத்தில் போதிய வேகம் இல்லை; தொழில் தொடங்குவதற்கான அமைதியான சூழ்நிலை--இடவசதி போன்றவற்றை மாநில அரசு செய்ய முடியும்; மற்ற வழிகளை மத்திய அரசுதான் செய்யவேண்டும்.

"மத்திய அரசின் உறுதியற்ற பொருளாதார கொள்கை தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது; எனவே, பொருளாதாரக் கொள்கையின் நிலையான--உறுதியான முடிவுகளை மத்திய அரசு எடுக்கவேண்டும்.

'எந்த வகைத் தொழில்களை அரசாங்கம் நடத்தவேண்டும்--தனியார் எந்தவகை தொழில்களை நடத்த வேண்டும்--கூட்டுறவுத் துறையில் நடக்க வேண்டிய தொழில்கள் எவை--அரசும் தனியாரும் சேர்ந்து நடத்தக்கூடிய தொழில்கள் எவை என்பதை மத்திய அரசு தெளிவாக--திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.

"தொழில் வளர்ச்சி மந்தத்துக்கு இன்னொரு காரணம் கச்சாப் பொருள் பற்றாக்குறை; இப்போதுள்ள முறைப்படி தொழிற்சாலைகள் மூலப் பொருள் வழங்குவதில், பல முறைகேடுகள் நடப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது; எனவே மூலப் பொருள்களைப் பங்கீட்டு கொடுக்கும் பணியை மாநில அரசு மூலம் செய்யவேண்டும்"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், புதுடில்லியில் நடைபெற்ற மாநிலத் தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

மேற்கு வங்க ஆலைகளில் அமைதியின்மை

ரூ. 2.50 கோடி மதிப்புள்ள உற்பத்திப் பாதிப்பு

கல்கத்தா, செப். 20—

மேற்கு வங்க சணல் ஆலைகளில் மீண்டும் அமைதியின்மை ஏற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது; இதனால், எதிர்பார்க்கப்படும் அளவுக்குச் சணல் உற்பத்தி பெருகவில்லை.

கடந்த மே முதல், தொழிலாளருக்குக் கணிசமான ஊதிய உயர்வும் மற்ற வசதிகளும் அளிக்கும் ஒப்பந்தம் ஒன்று நடைமுறையில் இருந்துவருகிறது; ஆயினும், அன்றுமுதல் இத்திங்கள் 2-ம் நாள் வரையில், 10 ஆலைகளில் 80 நாட்கள் முழு வேலைநிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது; இதனால் ரூ 2 50 கோடி மதிப்புடைய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது.

மொத்தமுள்ள உற்பத்தியில் இந்த ஆலைகள் 20 சதவிகிதம் உற்பத்தி செய்யக்கூடியவைகளாம்.

இதன்றி, வேறு பல ஆலைகளிலும் தொழிலாளர் பிரச்சினையால் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது.

பீகாரில் ஆசிரியர்கள் போராட்டம்

பாட்னா, செப். 20—

பீகார் மாநிலத்தில் தனியாரிடமுள்ள 2,651 தொடக்கப் பள்ளிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி--இப்பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 27,000 ஆசிரியர்களும் கால வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தலைமைச் செயலகம் போன்ற அரசு அலுவலகங்களில் தொடர்ந்து மறியல் செய்துவருகின்றனர்.

6 இலட்சம் பேருக்குக் கண்ணொளி வழங்கத் தமிழக அரசு உறுதி

அமைச்சர் அன்பழகன் தகவல்

உதகை, செப். 20—

"தமிழ்நாட்டிலுள்ள 6 இலட்சம் கண்ணிழந்தோருக்கு மீண்டும் கண்ணொளி வழங்க அரசு உறுதி கொண்டிருக்கிறது; இதுவரையில் இங்கு சுமார் 2 000 பேருக்கு இலவசக் கண் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது"

என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் இங்கு நடைபெறும் இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் தெரிவித்தார்.

கண் சிகிச்சை நிதிக்காக, மாவட்டக் கலெக்டர் சாமிநாதன் ரூ. 20,000-த்துக்கான செக் ஒன்றை நீலகிரி மாவட்டத்தின் சார்பில் அமைச்சரிடம் அளித்தார்; அதனைப் பெற்றுக்கொண்டு அமைச்சர் அன்பழகன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாநிலம் முழுவதும் இப்படிப்பட்ட 150 இலவச கண் சிகிச்சை முகாம்களை அமைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது; இதற்கு ரூ. 1 கோடி செலவாகும் என்று கருதப்படுகிறது; ஆனால் இதுவரையில் இதற்கு ரூ. 25 இலட்சம் மட்டுமே பொதுமக்களிடமிருந்து வசூல் ஆகியிருக்கிறது.

தமிழகத்தில் சுமார் 6 இலட்சம் பேர் முழுக் குருடர்களாகவும்--4 இலட்சம் பேர் ஒற்றைக் கண் குருடராகவும் இருந்துவருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஏழ்மையின் காரணமாக இவர்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு தங்கள் கண்களைக் குணப்படுத்திக்கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றனர்; இதற்காகவே அரசு இப்படிப்பட்ட இலவசக் கண் சிகிச்சை முகாம்களை ஏற்பாடு செய்திருக்கிறது.

கவலை தரும் தீவிரப் பிரச்சினை

தமிழகத்தில் ஊட்டச் சத்துக் குறைவு போன்ற காரணங்களால் 26,000 குழந்தைகள் கண்ணிழந்து தவிக்கின்றனர்; அரசும்--பொதுமக்களும் தீவிரமாகக் கவலைப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாகும் இது.

இதனையெல்லாம் கருதி ஏழை மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைபிடிப்பது அவசியமாகும்."

ஆந்திரத்தில் கலைஞர்--நாவலர்

சென்னை, செப். 20—

இன்று மாலை 4-மணியளவில் ஐதராபாத்தில உள்ள திருமதி சதயம்மா நரசிம்ம ராவ் நினைவுக் கல்லூரியின் புதிய கட்டடத்தை முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைப்பார்.

கல்வி அமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இக்கல்லூரியின் விரிவுரை மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

ஆந்திர மாநில கல்வி அமைச்சர் பட்டம் இராமமூர்த்தி இக்கல்லூரியின் ஆய்வுக்கூடத்தைத் திறந்துவைப்பார்.

உஸ்மானியா பல்கலைக் கழகத் துணைவேந்தர் என். நரோத்தம ரெட்டி இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

ஒரிசா புயல்--வெள்ளம்

ரூ. 30 கோடி பெறுமானமுள்ள சொத்துக்கள் நாசம்

2 இலட்சம் வீடுகள் இடிந்து வீழ்ந்தன--. 97 பேர் உயிரிழந்ததாகத் தகவல்

புவனேசுவரம், செப். 20—

கடந்த வாரம் ஒரிசாவில் ஏற்பட்ட புயல்--வெள்ளம் காரணமாக 97 பேர் இறந்துவிட்டதாகவும், ரூ 30 கோடி பெறுமானமுள்ள சொத்துச் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் அதிகாரபூர்வமான மதிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது.

45 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர்

ஒரிசா மாநிலத்தின் 13 மாவட்டங்களில் 10 மாவட்டங்களிலுள்ள சுமார் 45 இலட்சம் மக்கள் புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்; 60 இலட்சம் ஹெக்டேர் பயிர் நிலம் சேதமடைந்தது; 2 இலட்சம் வீடுகள் இடிந்து விழுந்தன.

ரூ. 8 கோடி மானிய உதவி கோரிக்கை

மாநில அரசு மத்திய அரசிடம் ரூ. 8 கோடி மானிய உதவியும், ரூ 6 கோடி கடனுதவியும் கோரியிருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி, எல்லாவிதமான உதவியும் செய்வதாக வாக்குறுதி அளித்திருப்பதாக முதலமைச்சர் நந்தினி கூறினார்.

சிம்லா ஒப்பந்தம் மீறப்படுகிறதாம்

இந்தியாமீது பூட்டோவின் மறைமுகக் குற்றச்சாட்டு

'கடந்த போரின்போது பிடிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து படை வீரர்களைத் திரும்பப்பெற இந்தியா தாமதம் காட்டி வருகிறது"

என்று பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, இந்தியாவை மறைமுகமாகக் குறைகூறியிருக்கிறார்.

செய்தியாளர்களிடம் பேசிய பூட்டோ, படை வீரர்கள் திரும்பப் பெறப்படுவது தொடர்பான ஐ.நா. தீர்மானமும்--சிம்லா ஒப்பந்தமும் மீறப்பட்டுவருவதாகத் தெரிவித்ததாகப் பாகிஸ்தான் வானொலி கூறியது.

'ஒப்பந்தத்தை மீறுவது பாகிஸ்தான் அல்ல' என்று கூறிய பூட்டோ, 'இதை ஒரு பிரச்சினையாக்க பாகிஸ்தான் முன்வராது' என்றும் தெரிவித்திருக்கிறார்.

படை வீரர்களைத் திரும்பப் பெறப்படுவது தொடர்பாக இராணுவத் தளபதிகள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திவருவதாகப் பூட்டோ கூறினார். (ஆனால் உண்மையில் ஜம்மு-காஷ்மீர் பகுதியில் எல்லையை நிர்ணயிக்கவே பேச்சுவார்த்தை நடந்துவருகிறது; படை வீரர்கள் திரும்பப் பெறப்படுவதற்கு இதுவே தடையாக இருந்து வருகிறது.)

"படை வீரர்கள் திரும்பப் பெறப்படுவதில் காலதாமதமாவதற்குஎன்ன காரணம் இருந்தபோதிலும், பாகிஸ்தான் தனது கொள்கையிலிருந்து பின்வாங்காது" என்றும் பூட்டோ கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானைப் பொறுத்த வரையில், தனது படை வீரர்களைத் திரும்பப் பெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டதாகத் தெரிவித்தார்.

போரின்போது கைது செய்யப்பட்ட 511 பாகிஸ்தான் குடிமக்கள், நேற்று எல்லையில் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர்.

கழகத்தின் வலிமை குறைந்துவிட்டதா?

சென்னைப் பத்திரிகைகள் உருவாக்கும் 'மாயை'

நம்புபவர்கள் நம்பட்டும் -- நாம் வளர்ந்துகொண்டே இருப்போம்

அரசியல் மேடையில் அண்ணா ஏற்படுத்திய திருப்பம் --- கழகத் தலைவர் கலைஞர் விளக்கம்

பாளையங்கோட்டை, செப். 20 —

"ஒரு மாயை நாட்டிலே காட்டப்படுகிறது -- தமிழ்நாட்டிலே இருக்கின்ற பத்திரிகைக்காரர்களால் அந்த மாயை பெரிதுபடுத்திக் காட்டப்படுகிறது, 'கழகத்திற்குப் பேராபத்து வருகிறது -- கழகத்திற்கு ஆதரவு குறைகிறது' என்றெல்லாம் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

"சென்னை மாநகரத்தில் ஒரு பத்து நாளைக்குப் பத்திரிகைகளை மாத்திரம் ஒருவன் தன்னுடைய அறையிலேயே இருந்துகொண்டு படித்துக் கொண்டிருப்பானானால் -- பத்தாவது நாள் அவனைப் பார்த்து, 'உலகம் எப்படி இருக்கிறது' என்று கேட்டால், 'திராவிட முன்னேற்றக் கழகம் கலகலத்துப் போய்விட்டது; திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஆளே கிடையாது! இன்னும் ஒரு நாளோ -- இரண்டு நாளோதான் அதன் ஆட்சி இருக்கும்' என்று அவன் சொல்லுவான்! காரணம், சென்னையில் வெளியாகின்ற சில பத்திரிகைகள் அப்படிப்பட்ட செய்திகளைத்தான் தந்துகொண்டிருக்கின்றன!

"அதைப்போலவே வெளிநாட்டிலே இருக்கின்ற சில பத்திரிகைகளும் -- வடபுலத்திலே இருக்கின்ற சில பத்திரிகைகளும் -- வேறு அண்டை மாநிலங்களிலே இருக்கின்ற சில பத்திரிகைகளும், சென்னை மாநகரத்திலே இருக்கின்ற நிருபர்கள் -- தமிழகத்திலே இருக்கின்ற நிருபர்கள் எழுதி அனுப்புகின்ற செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன! அவற்றைப் படித்துப் பார்க்கின்ற வேறு மாநிலத்துக்காரர்கள், 'திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மக்களிடத்திலே டந்தமும் -- சொந்தமும் -- பிடிப்பும் இல்லை; இனிமேல் முன்னேற்றக் கழகம் வளர வாய்ப்பும் இல்லை' என்றுதான் கருதுவர்; அவ்வாறு கருதிக்கொண்டும் இருக்கின்றனர்!

"எனக்கு அதிலே ஒரு மகிழ்ச்சிகூட; இவர்கள் இப்படி எழுதிக்கொண்டே இருக்கட்டும் -- அதை நம்பி எதிரிகள் ஏமாந்துகொண்டே இருக்கட்டும் -- நாம் வளர்ந்துகொண்டே இருப்போம்' என்பதுதான் அந்த மகிழ்ச்சி!

"1971-லே நம்மைப் பற்றி எழுதாத -- விஷமப் பிரசாரம் செய்யாத அளவுக்கா இனிமேல் செய்துவிடப்போகிறார்கள்? அந்தக் கடும் சோதனையிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் தப்பித்துக்கொண்டது! எனவே, எந்தச் சோதனைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தாங்கும்! ஏனென்றால், நாம் பின்பற்றுகின்ற வழி நம்மை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியாகும்.

"அண்ணா அவர்களின் வழி அரசியல் நாகரிகத்தைக் கடைபிடித்துச் செல்லும் வழியாகும்! தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் அண்ணா அவர்களின் தலையீட்டுக்குப் பிறகுதான் புதியதொரு திருப்பமே ஏற்பட்டது! அதற்கு முந்தியெல்லாம், அரசியல் மேடைகளில் 'லாவணி'ப் பாட்டுக்கள் நடைபெறும்; தனிப்பட்டவர்களைத் தாக்குகின்ற விவகாரங்கள்தான் அந்தக்காலத்து அரசியல் மேடைகளில் பேசப்பட்டவையாக இருந்தன! இன்று அந்த நிலைமை முற்றிலும் மாறுபட்டிருக்கிறதென்று நான் ஒப்புக்கொள்வதற்குத் தயாராக இல்லை.

"அண்ணா அவர்கள் வந்தபிறகு கழக மேடையைத் தனிப்பட்டவர்களைத் தாக்குவதற்குப் பயன்படுத்தாமல், நம்முடைய கொள்கையை நாட்டு மக்களுக்கு எடுத்துச்சொல்ல -- நாம் தாக்கப்படும் நேரத்தில் நாம் யார், நம்முடைய இலட்சியம் என்ன என்பதையெல்லாம் மக்களுக்குத் தெளிவாக்க நம்முடைய மேடைகள் பயன்பட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார்கள் -- நினைநாட்டினார்கள்! அதிலே பிறந்த அழகான சொற்றொடர்தான், 'மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணம் இருக்கும்' என்பது!

"உலகத்தில் எந்த ஓர் அரசியல் கட்சித் தலைவனும் இந்த அருமையான வாசகத்தை இந்த அவனிக்குச் சொன்னதில்லை; அட்டியச் சொன்ன ஒரே ஒரு தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான்! 'மாற்றான் தோட்டத்திலே மலர்ந்தது என்பதற்காக மணமில்லை என்று சொல்லாதே! மணமுள்ள மல்லிகைதான்' என்று எடுத்துச் சொன்ன அரசியல் பெருந்தன்மை அண்ணா அவர்களுக்குத்தான் உண்டு!"

—என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், பாளையங்கோட்டையில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் ஆற்றிய உரையில் பல்வேறு அம்சங்கள் பற்றிக் குறிப்பிட்டார்; முக்கியப் பகுதிகள் வருமாறு:—

"எவ்வளவு பெரிய இரயில்வே வேலைநிறுத்தம் -- அதேநேரத்தில் சிம்சன் வேலைநிறுத்தம்; பத்திரிகையிலே பார்த்தால், சிம்சன் வேலைநிறுத்தத்தைப் பற்றி பக்கம் பக்கமாகச் செய்திவருகிறது.

இரயில்வே வேலைநிறுத்தம் பற்றியோ, 'இரயில் ஓடுகிறது -- முக்கால் பகுதி இரயில் ஓடுகிறது; 70 சதவிகிதம் இரயில் ஓடுகிறது' என்றெல்லாம் செய்தி போடுகிறார்கள்.

இரயில்கள் ஓடக்கூடாது -- ஓட வேண்டாமென்று நாம் சொல்லவில்லை; ஓடவேண்டுமென்று ஆசைப்பட்ட காரணத்தினாலேதான், 'நான்கூட ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன்' என்று தலைமையமைச்சருக்கும் -- இரயில்வே அமைச்சருக்கும் தந்தி அனுப்பினேன்.

இரயில்வே அமைச்சர் புதியவர்; நல்லவர்தான்; ஆனால், அரசியலில் அதிகம் பழக்கப்படாதவர்; அதிகாரியாக இருந்து அந்தப் பீடத்தை அலங்கரிப்பவர்; ஆகவே, 'யாரும் இதிலே தலையிட வேண்டாம்' என்று அவர் சொல்லிவிட்டார்; நான் பணிவோடுதான் சொன்னேன் அவருக்கு -- 'தலையிடுவதாகக் கருதாதீர்கள் -- ஒத்துழைப்புத் தருகிறேன்; தேவையானால் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்றுதான் சொன்னேன்.

அதுவும் நிருபர்கள் கேட்டார்கள்—'நீங்கள் ஏதாவது முயற்சி எடுக்கப் போகிறீர்களா' என்று; என்னையும் கேட்டார்கள் -- சென்னைக்கு வந்திருந்த மத்திய தொழிலாளர் நல அமைச்சர் காடில்கரையும் கேட்டார்கள்; இரண்டு பேரும் சொன்னோம்; 'மத்திய அரசு எங்கள் ஒத்துழைப்புத் தேவை என்று கருதினால், ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்' என்று; உடனே, 'யார் தலையிடும் தேவையில்லை; வருகிற கௌரவம் எனக்கே வரட்டும்; மற்றவர்கள் அந்தக் கௌரவத்தைத் தட்டிக்கொண்டு போக அனுமதிக்கமாட்டேன்' என்று அவர் சொல்லிவிட்டார்.

என்னைச் சந்தித்த இரயில்வே தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அந்தப் போராட்டத்தினுடைய வரலாற்றை என்னிடத்திலே சொல்லி, 'நீங்கள் இதுபற்றி தலைமையமைச்சருக்குத் தெரிவியுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்கள்; நான் அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் கேட்டேன்; 'இவ்வளவு கோரிக்கைகளையும் நிறைவேற்ற நான் உத்தரவாதம் அளிக்கமுடியாது; இதிலே நீங்கள் குறைந்தபட்சம் எந்தக் கோரிக்கைகளுக்கு ஒத்துவருவீர்கள்' என்று கேட்டேன்; மூன்று கோரிக்கைகளைச் சொன்னார்கள்; சாதாரணமான கோரிக்கைகள்தான் -- கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்; எந்தத் தொழிலாளியும் பழிவாங்கப்படக் கூடாது; வேலைத் துண்டிப்பு கூடாது—என்பதுதான் அவைகள்; இவைகள் எப்போதுமே போராட்டத்தினுடைய கடைசியிலே வருகின்ற கோரிக்கைகள்தான்!

"அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றினால் போதும்' என்றார்கள்; இதைத்தான் தலைமையமைச்சருக்கும்—இரயில்வே அமைச்சருக்கும் தெரிவித்தேன்; அதிலேகூட இரயில்வே அமைச்சர், 'என்னைப் பார்த்துப் பேசச் சொல்லுங்கள்' என்று சொன்னார்.

நிருபர்கள் என்னைக் கேட்டார்கள் -- 'இரயில்வே அமைச்சர் இப்படிச் சொல்லியிருக்கிறாரே' என்று; நான் சொன்னேன்—'1970-ம் ஆண்டிலே நந்தா இரயில்வே அமைச்சராக இருந்தார்; அப்போது இப்படித்தான் ஒரு வேலைநிறுத்தம் தமிழ்நாட்டிலே நடந்தது; உடனே நந்தா தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்புகொண்டு அதைக் கவனிக்கச் சொன்னார்; கவனித்தேன்; போராட்டம் நின்றது; பிறகு நந்தா எனக்கு நன்றிகூறிப் பத்திரிகைகளிலே அறிக்கைகூடக் கொடுத்தார்; நான் அந்தப் பழைய நினைவில் இந்தத் தவறைச் செய்துவிட்டேன்' என்று அவர்களுக்குச் சொன்னேன்.

அது நடந்தது 1970; இது 1972 அல்லவா? நான் அந்த வேற்றுமையைப் புரிந்துகொள்ளாமல், ஆசையால்—ஆர்வத்தால்—பயணிகளுக்கு ஏற்படுகின்ற சிரமங்களைப் போக்க வேண்டுமென்கின்ற அக்கறையால் ஒத்துழைப்புத்தர முன்வந்தேன்.

என்றும் நான் சொல்லவில்லை; ஆனால், 'தொழிலாளிகளே -- வேலைக்குச் செல்லுங்கள் -- எட்டுக் கோரிக்கைகளை நிறைவேற்ற இயலாது; குறைந்தபட்சக் கோரிக்கைகளைச் சொல்லுங்கள்; நான் தலைமையமைச்சருக்குத் தெரிவிக்கிறேன்' என்று மட்டுமே சொன்னேன்; இது நான் நடந்துகொண்ட முறை.

ஆனால் சிம்சன் போராட்டத்தின்போது மோகன் குமாரமங்கலம் அணுகிய முறை, 'இதை மத்திய அரசு பார்த்துக்கொண்டிருக்காது; நீங்கள் மாநில அரசுக்காகப் பயப்படத் தேவையில்லை' என்பதுதான் இது, மோகன் குமாரமங்கலம், நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற தொழிலாளிகளை அணுகிய முறை!

அது மாத்திரமல்ல; இப்பொழுது சிம்சனில் கிட்டத்தட்ட 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் வேலைக்குச் செல்கிறார்கள்; இங்கு வருகிற சி. சுப்பிரமணியம், தொழிலாளர் கூட்டத்தைக் கூட்டுகிறார் -- அங்கே போய்ப் பேசுகிறார்; 'மத்திய அரசே சிம்சன் கம்பெனியை எடுத்துக்கொள்ளலாமா என்பது பற்றி மத்தியிலே இருக்கின்ற அமைச்சர்கள் கலந்து பேசுகிறோம்' என்று சொல்லிவிட்டுப் போகிறார்; இதுதான் அவர்கள் மாநிலப் பிரச்சினையை அணுகிய முறை!

இப்படியே மாநிலப் பிரச்சினைகளில், ஆந்திரத்துக்கு ஒரு நீதி -- மைசூருக்கு ஒரு நீதி -- கேரளாவுக்கு ஒரு நீதி என்று இருப்பதா? அங்கெல்லாம், அந்தந்த மாநில அரசுகளே பார்த்துக்கொள்ளும்; ஆனால், 'தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் தலையிடுவோம்' என்று சொன்னால்...

நான் பொறுமையாக இருக்கிறேன்; என்னுடைய பொறுமையைச் சோதிக்காதீர்கள் -- என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மத்திய அமைச்சர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'தமிழ்நாடு அமைச்சர்களைப் பற்றி எனக்குத் தினம் தினம் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன' என்று மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் பேசுகிறார்; என்னிடம் பேசிய நிருபர்கள், 'அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்' என்று கேட்டார்கள்; கட்சியை வளர்க்க அவர் ஏதேதோ பேசுகிறார்; அதற்கெல்லாம் பதில் சொல்லத் தேவையில்லை' என்று சொன்னேன்.

'புகார்கள் வருகின்றன' என்று பொது மேடையில் -- புழுதியை வாரி இறைத்துவிட்டுப் பேசுவது சுலபம்; நான் சொல்லக்கூடாதா -- 'சுப்பிரமணியத்தைப் பற்றி நாள்தோறும் ஒரு 150 புகார் கடிதங்கள் வருகின்றன; என்று; என்னால் அதைச் சொல்ல முடியாதா?

இப்படிப்பட்ட 'லாவணி'ப் பாட்டுக்களைப் பொது மேடையிலே பொறுப்பிலே இருப்பவர்கள் பாடிக்கொண்டிருக்கக்கூடாது -- என்றுதான் மத்திய அரசிலே இருக்கின்றவர்களுக்கு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்."

பொறுமையைச் சோதிக்க வேண்டாம்

—★—

மத்திய அமைச்சர்களுக்கு முதலமைச்சர் அறைகூவல்

'சிம்சன் போராட்டத்திலே மத்திய அரசு தலையிடக்கூடாது என்று சொல்கின்ற கருணாநிதி, இரயில்வே போராட்டத்திலே தலையிடலாமா' என்று கேட்கக்கூடும்; 'இது தலையீடு அல்ல' என்று தொடக்கத்திலேயே சொல்லிவிட்டேன்; அது மாத்திரமல்ல; 'தொழிலாளிகளே -- என்ன ஆனாலும் பார்த்துக்கொள்கிறேன் -- பயப்படாதீர்கள்'

அண்ணா வளர்த்த அரசியல் பண்பாடு

காமராசர் காட்டும் காழ்ப்புணர்ச்சி

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டு அரசியலில் எத்தகைய பண்பாட்டை உருவாக்கி வளர்த்தார் என்பதையும், அதே நேரத்தில் காமராசர் கழக ஆட்சிக்கு எதிராக எத்தகைய பண்பற்ற பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதையும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாளையங்கோட்டையில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாவில் பேசுகையில் எடுத்துக் காட்டினார்; அவர் குறிப்பிட்டதாவது: –

"அண்ணா அவர்கள், எதை எதைச் சொல்லி 'ஆட்சி மாற வேண்டும்' என்று சொன்னார் -- இதனை அனைவரும் உணருவது அவசியமாகும்.

இந்தி ஆதிக்கத்தை ஒழிக்க ஆட்சி மாறவேண்டும் –

நிலச் சீர்திருத்தம் ஒழுங்காக நடைபெற ஆட்சி மாற வேண்டும் –

ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் ஏற்பட ஆட்சி மாறவேண்டும் –

தீண்டாமையை ஒழிக்க ஆட்சி மாறவேண்டும் –

'ஆட்சி மாறவேண்டும்' என்பதற்கு இப்படியெல்லாம் கொள்கை ரீதியான காரணங்களைச் சொன்னார்.

ஆனால் காமராசரோ, 'வட்டங்கள் வாழ்கிறார்கள்; மாவட்டங்கள் வாழ்கிறார்கள்; காரிலே போகிறார்கள்; தேரிலே போகிறார்கள்; விளக்கும் போடுகிறார்கள்; மேடை அமைக்கிறார்கள்; கிரீடம் வைத்துக் கொள்கிறார்கள்; ஆகவே ஆட்சி மாறவேண்டும்' என்று சொல்கிறார்!

கிரீடம் எனக்கு மாத்திரமா வைக்கிறார்கள் – காமராசருக்கு வைக்கவில்லையா மலர்க் கிரீடம்! கும்பகோணத்திலே காமராசருக்கு மலர்க் கிரீடம் வைத்து – அதைப் புகைப்படம் எடுத்து– காங்கிரசுக் கட்சிப் பத்திரிகைகளிலெல்லாம் போட்டார்களே – அப்போது ஏன் தவறாக அதுபடவில்லை?

'நமக்கு ஒரு இடத்திலே வைத்தார்கள்: இவர்களுக்குப் போகிற இடமெல்லாம் வைக்கிறார்களே' என்கின்ற கோபம் அவருக்கு வருகிறது.

சிலை அமைத்தோம் – சீறி விழுந்தார்கள்; இன்றைக்குக் கப்பலோட்டிய தமிழனுக்கு நூற்றாண்டு விழா – செக்கிழுத்த சிதம்பரனாருக்கு நூற்றாண்டு விழா – அந்தப் பெருமகனுக்குத் தூத்துக்குடியிலே சிலை வைக்கத் தமிழக அரசு முடிவெடுத்தது; அந்தச் சிலையைத் திறந்துவைக்க இந்தியாவின் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் வருகிறார்கள்; அந்த நேரத்தில் – சிதம்பரனார் சிலைத் திறப்பு விழாவில் கலந்துகொள்ள வேண்டியவர்கள் – சிவகாசியிலே காமராசருக்குச் சிலை எடுக்கிறார்கள்; நூற்றாண்டு விழா சிதம்பரனாருக்கு – சிலை வைப்பது காமராசருக்கு! வைக்கட்டும்! என்னைக் கூப்பிட்டால்கூட வந்து திறந்துவைக்கத் தயாராக இருக்கிறேன்; ஆனால், கூப்பிடமாட்டார்கள் – இது, பாவியின் கரங்கள்; அந்தப் 'பரமாத்மா'வின் சிலையைத் திறந்து வைக்க இந்தப் பாவியின் கரங்களுக்குத் தகுதியில்லை!

ஆனால், நாங்கள் சிலை வைக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது; வ. உ. சி. சிலை திறக்கும் நாளில் – அதுவும் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற நாளில் – சிவகாசியிலே காமராசர் சிலை திறந்துவைக்கப்படுகிறது; ஆத்திரம் வர வேண்டாமா -- ஏடுகளிலே விமர்சனங்கள் வரவேண்டாமா?

நாங்கள் சிலை வைக்கிறோமென்றால், எங்களுக்காகவா வைத்துக் கொள்கிறோம்? ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழனை தவமிருந்து பெற்ற பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணா; தமிழ்ச் சமுதாயத்தினுடைய வழிகாட்டி; தன்மான உணர்வுக்காக – தமிழ்ச் சமுதாயம் விழித்தெழுவதற்காக 40 ஆண்டுக்காலம் காடுமேடுகள் சுற்றி -- கடும் பயணம் நடத்தி -- சாக்கடைகளை எல்லாம் தாண்டி எழுத்தால் -- பேச்சால் -- எண்ணத்தால் இலட்சோப லட்சம் பேர்களைத் தனது அருமைத் தம்பிமார்களாகப் பெற்று பீடுநடை போட்ட அந்தப் பெருமகனுக்குத்தான் சிலை வைக்கிறோம்!"

அண்ணாவின் உயிலுக்கு உயிர் கொடுப்போம்!

திசைதிருப்பும் திருப்பணி வேண்டாம்

தவறு இருந்தால் தாராளமாக எடுத்துச் சொல்லட்டும்

தி. மு. கழகத்தின் கொள்கைகளை விமர்சனம் செய்யட்டும்; முன்னேற்றக் கழகம் கோரும் மாநில சுயாட்சி பற்றி விமர்சிக்கட்டும்; மாநில சுயாட்சிக் கோரிக்கையால் நாட்டிற்கு எப்படித் தீங்கு ஏற்படும் என்பதை விளக்கட்டும் -- அதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்கிறோம் – அதுபற்றி விளக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தேவையில்லாமல் பிரச்சினைகளைத் திசை திருப்ப ஏன் முயற்சிக்க வேண்டும்? மாநில சுயாட்சிக் கொள்கையை -- அதிலே இருக்கின்ற உண்மையை நாங்கள் எடுத்துவைக்கின்ற தெளிவுகளை -- நாங்கள் தருகின்ற விளக்கங்களைச் சந்திக்கச் சக்தியில்லாமல் -- மனமில்லாமல் பிரச்சினைகளை வேறு பக்கம் திசை திருப்புவது அழகல்ல என்பதை, தமிழ்நாட்டிலே இருந்து மத்தியிலே போய் -- நம்முடைய தயவால் அல்ல -- அவர்களது தகுதியால் அமைச்சர் பதவிகளைப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்களுக்கு நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கு வாருங்கள் அல்லது டெல்லியிலேயே பேசுங்கள் -- மாநில சுயாட்சியால் என்னென்ன தீமை என்று சொல்லுங்கள் -- பிரச்சினையைத் திசை திருப்பாதீர்கள்;

'இது நாட்டுப் பிரிவினை; மாநில சுயாட்சி என்றால் தமிழ்நாட்டைத் தனி நாடாக ஆக்கவேண்டும் என்று கேட்கிறார்கள்' என்றெல்லாம் சொல்லாதீர்கள்; எங்களது தூய நோக்கத்துக்குக் களங்கம் கற்பிக்காதீர்கள்;

அண்ணா அவர்கள் கடைசியாக எழுதி வைத்துவிட்டுப்போன சாசனம் 'மாநில சுயாட்சி'தான்! 'காஞ்சி' பொங்கல் மலரில், 'தம்பி'க்கு எனும் கடிதத்தில் அண்ணா அவர்கள், 'நான் சூழ்நிலைக் கைதியாக இருக்கிறேன்; அதிகாரங்கள் இல்லை; எவ்வளவோ இந்த நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டும் என்று கருதுகிறேன்; ஆனால் என் கை கட்டப்பட்டு இருக்கிறது; அதிகாரம் கிடையாது; அதிக அதிகாரம் பெற்றாக வேண்டும்' என்று எழுதிவைத்துவிட்டுப் போனார்கள்.

அந்த உயிலுக்கு உயிர் கொடுக்க -- அந்தச் சாசனத்தை சாதனையாக ஆக்க -- எவ்வளவு சோதனைகள் ஏற்பட்டாலும் வெற்றி பெற -- அறிஞர் அண்ணா பிறந்த நாளில் நாம் அனைவரும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்."

கைத்தறித் தொழிலுக்கு உதவும் திட்டம்

தொழில் அமைச்சர் மாதவன் விளக்கம்

சேலம், செப். 19—

"கைத்தறி நெசவுத் தொழிலுக்கு எந்தவிதமான நூல் -- எவ்வளவு தேவை என்ற புள்ளி விவரங்களைத் திரட்டிய பிறகு, அத்தொழிலுக்கு உதவி செய்வதற்கான ஒரு திட்டம் வகுக்கப்படும்"

என்று கைத்தொழில் துறை அமைச்சர் செ. மாதவன், கைத்தறியாளர் சங்கங்களின் சார்பில் கொடுக்கப்பட்ட மனுக்களுக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்யும்படி அரசு உத்தரவிட்டிருக்கிறது; இந்த வேலை தீபாவளிக்கு முன்பு முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

"சில குறிப்பிட்ட ரகத் துணிகளைக் கைத்தறிகளுக்கு என்று ஒதுக்கிவைக்க வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

நெசவாளர்கட்கு அடையாள அட்டைகள்

காரணம்பற்றி விளக்கம்

சேலம் கைத்தறி நெசவாளர் சங்கக் கூட்டத்திலும் -- கைத்தறி உற்பத்தியாளர் சங்கக் கூட்டத்திலும் அமைச்சர் மாதவன் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்ததாவது:—

"கைத்தறி--விசைத்தறி துறைகளைச் சேர்ந்த நெசவாளர்களுக்கும், கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த நெசவாளர்களுக்கும் அடையாளக் கார்டு வழங்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள தறிகளின் எண்ணிக்கை -- நெசவாளர்களுக்குத் தேவையான நூலின் அளவு -- நூல் தரம் -- நிதி வசதி ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்கு இந்த அடையாளக் கார்டுகள் பயன்படும்; இந்தத் தகவல்களை திரட்டினால்தான், நெசவாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு விரிவான திட்டம் தயாரிக்க முடியும்.

இது தவிர, கைத்தறித் தொழிலுக்கு வேட்டி -- புடவை ரகங்களை ஒதுக்கி உத்தரவிட அனுமதிக்க வேண்டும் என்று கோரி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

இந்த உத்தரவை மீறி தயாரிக்கப்பட்டு -- வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் சரக்குகளைக் கைப்பற்ற அதிகாரம் அளிக்கவேண்டும் என்றும் கோரியிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் ரூ 8 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கி நிற்கின்றன; இதில், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திடம் மட்டும் ரூ. 4 கோடி மதிப்புள்ள துணிகள் தேங்கியுள்ளன.

கூட்டுறவு சங்கங்களிடமிருந்து மேலும் கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்ய அண்மையில் அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது; முழு இருப்பையும் தீபாவளிக்கு முன்னதாக கொள்முதல் செய்துவிட முடியும் என்று நம்புகிறோம்; இதற்காக ரூ. 1.50 கோடி நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம்.

நெசவாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நியாய விலையில் நூல்களை விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கூட்டுறவு நூற்பு ஆலைகள் -- அண்மையில் அரசு ஏற்ற ஆலைகள் ஆகியவற்றின் உற்பத்தி முழுவதும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அளிக்கப்படும்.

பிரைமரி சங்கங்களுக்கு தள்ளுபடி (ரிபேட்) அளிப்பதில் காலதாமதத்தை தவிர்க்கவும் விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

தொழில்த் துறையுடன் கலந்தாலோசித்து நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒப்புக்கொண்டிருக்கிறது."

கழகத்தைக் கண்போல் காப்போம்

நமது இலட்சியம் வெற்றிபெற்றே தீரும்

என். வி. என். -- மன்னை நாராயணசாமி -- அரங்கண்ணல் முழக்கம்

சென்னை, செப். 19 —

17—9—72 அன்று கடற்கரை சீரணி அரங்கில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், அமைச்சர் மன்னை நாராயணசாமி, இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. ஆகியோர் ஆற்றிய உரைகளின் சுருக்கம் வருமாறு:—

இராம. அரங்கண்ணல்

குடிசைமாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கடமை தவறாமல் -- கண்ணியம் வழுவாமல் -- கட்டுப்பாட்டுடன் பேரறிஞர் அண்ணா அவர்களாலே வளர்க்கப்பட்டதாலேதான் 18,000 கிளைக் கழகங்களுடனும் -- 16 இலட்சம் உறுப்பினர்களுடனும் இன்று நம்முடைய கழகம் ஆல்போல் தழைத்திருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்ததற்குப் பிறகு 'கழகம் என்ன ஆகுமோ -- ஏது ஆகுமோ' என்று பேசப்பட்டது; அப்படிப்பட்ட பேச்சுக்கே இடமில்லாத வகையில், 'மற்றவர்களை எடை போட என்னாலும் முடியும் -- அண்ணாவைப் போல் கழகத்தைக்கட்டிக்காக்க என்னாலும் முடியும்' என்கின்ற வகையில் -- அண்ணாவின் வழியில் கலைஞர் அவர்கள் ஆட்சி நடத்தி வருகிறார் -- கழகத்தை வளர்த்து வருகிறார்!

அரசியல் உணர்வோடு மட்டுமேயல்லாமல் குடும்பப் பாச உணர்வோடு கழகத்தை வளர்த்தார் அண்ணா; கலைஞர் அவர்களும் அதே உணர்வோடு இருக்கும் காரணத்தாலேதான், தம்முடைய உணர்வுகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு -- அண்ணா இருந்தபோதிருந்த அதே வலிவோடும் பொலிவோடும் இன்று கழகத்தை வளர்த்து வருகிறார்!

எவ்வளவுதான் காமராசரும் -- ராஜாஜியும் நம்மை இழித்தும் பழித்தும் பேசினாலும்கூட, நாம் அதற்காகக் கவலைப்படத் தேவையில்லை; அவர்களுடைய கட்சிகள் எங்கேபோய்க் கொண்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரியும்; அவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் கழகத்தைக் கண்போல் காப்போம்.

மன்னை நாராயணசாமி

உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கொள்கையைத் தவிர வேறு எவருடைய கொள்கையும் இந்தத் தலைமுறையிலே தலைதூக்க முடியாது; அந்தக் கொள்கையின்படி, கலைஞர் தலைமையிலான இன்றைய அரசு சிறப்பாக நடைபோடுகிறது.

அதனாலேதான், கலைஞர் அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலும் -- காரியமும் அப்படியே அண்ணாவே, செய்வதுபோலிருக்கிறது!

இந்த நாட்டிலுள்ள பல்வேறு கட்சிகளும் சமதர்மக் கொள்கைகளை நிறைவேற்ற முடியாமல் -- ஆதிக்கபுரியினரையும் மிட்டாமிராசுகளையும் எதிர்த்து நிற்க முடியாமல் வலிவற்றுப் போயிருப்பதைக் காண்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் செல்வச் சீமான்களை எதிர்த்து நின்று -- சமதர்மக் கொள்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது.

கடந்த இரண்டு தேர்தல்களில் பணக்காரர்களை -- முடியரசர்களையெல்லாம் எதிர்த்து நின்று நாம் வெற்றி பெற்றோம்; பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே நின்று நாம் செயல்படுவதுதான் இதற்குக் காரணமாகும்.

ஏழை எளிய மக்களுக்காக அண்ணா அவர்கள் என்னென்ன செய்ய வேண்டுமென்று நினைத்தாரோ அவைகளையெல்லாம் ஒன்றுவிடாமல் நிறைவேற்றி வருகிறார் கழகத் தலைவர் கலைஞர்; அதற்கான எடுத்துக்காட்டுதான் அண்மையில் கும்பகோணத்தில் கலைஞர் அவர்கள் 1,57,000 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கியது.

அமைச்சர் என்.வி.என்.

கழகத் துணைப் பொதுச்செயலாளர் அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பேரறிஞர் அண்ணா அவர்களிடம் ஏறத்தாழ 30 ஆண்டுகள் பழகியவன் நான்; எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதற்காக அவர் யாரிடமுமே பேதம் காட்டிப் பழகியதில்லை; 'அரசியல் வேறு -- நட்புரிமை வேறு' என்றுதான் பழகி வந்தார்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் கட்சியின் தலைவராக மட்டுமல்ல -- நம் ஒவ்வொருவரின் குடும்பத் தலைவராகவும் இருந்தார்.

காங்கிரசுக் கட்சியின் ஆரம்ப காலத்தில், 'உத்தியோகம் வேண்டும் -- இந்துக்களுக்கு அதிகம் கல்விச் சலுகை வேண்டும்' என்பதுதான் அதனுடைய கொள்கையாக இருந்தது; நேரு போன்றவர்கள் தலைதூக்கிய பிறகுதான் காங்கிரசுக் கட்சி விடுதலை இயக்கமாக மாறியது.

அறிஞர் அண்ணா அவர்கள், கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு என்கின்ற வரையறைக்குள்ளேதான் நம்முடைய கழகத்தை வளர்த்தார்!

இன்றையத் தினம் கழக அரசுக்கும் எங்களுக்கும் பக்கபலமாக இருப்பது -- பேரறிஞர் அண்ணா அவர்களிடம் நாங்கள் பழகினோமே -- அந்தப் பழக்கவழக்கங்கள்தான்!

உத்தியோகத்திற்காக அண்ணா அவர்கள் நம்முடைய கழகத்தை வளர்க்கவில்லை.

பொதுத் தேர்தலில், கழக உறுப்பினர்கள்மீது நம்பிக்கை வைத்து இந்த நாட்டு மக்கள் பெருவாரியாகத் தேர்ந்தெடுத்தார்கள்; 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்பதால்தான் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்களே தவிர பதவி ஆசையினால் அல்ல!

அண்ணாவின் பாதையில் இன்று கலைஞர் நடக்கிறார்; அவர் இந்த நாட்டு மக்களின் நலன் கருதி எடுக்கும் முயற்சிகள் எல்லாம் வெற்றி பெற நாம் துணைநிற்க வேண்டும்.

அண்ணா அவர்கள் மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தினார்; மாநில சுயாட்சி நமது பிறப்புரிமை; கலைஞர் அவர்களின் தலைமையிலே நாம் மாநில சுயாட்சியைப் பெறுவோம்! அண்ணா அவர்களின் காலடியில் அந்தப் பெருமையை வைப்போம்!"

உணவுத்தானியங்கள்-14 சதவிகிதம் விலை உயர்வு

பம்பாய், செப். 18—

1971 ஜூன் மாதத்திற்கும் -- 1972 ஜூலை மாதத்திற்கும் இடையே மொத்த விலைக் குறியீட்டு எண் 6.8 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது; முந்திய ஆண்டைவிட இது இருமடங்கு அதிகமாகும்.

1970-71-ல் (ஜூலை -- ஜூன்) உணவுத் தானியங்களின் விலை 2.4 சதவிகிதம் இறங்கி இருந்தது; ஆனால் இந்த ஆண்டில் விலை 14 சதவிகிதம் உயர்ந்துவிட்டிருக்கிறது.

"அரிசி விலை 10.1 சதவிகிதமும் கோதுமை விலை 3.8 சதவிகிதமும் உயர்ந்திருக்கிறது" என்று ரிசர்வ் பாங்கி அறிக்கை ஒன்று கூறுகிறது.

மைசூர் மாநிலத்தில் தொழிலமைதி சீர்குலைவு

ஊழியர்கள்மீது துப்பாக்கிச் சூடு-- ஒருவர் மரணம்--மற்ருெருவர் கவலைக்கிடம்

பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை கதவடைப்பு

பெங்களூர், செப். 20—

மைசூர் அரசுக்குச் சொந்தமான பத்ராவதி இரும்பு-- உருக்குத் தொழிற்சாலையில் நேற்று முதல் கதவடைப்புச் செய்யப்பட்டிருக்கிறது; இந்தத் தொழிற்சாலையில் 12,000 பேர் பணியாற்றுகின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களாகவே இந்திரா காங்கிரசு ஆளும் மைசூர் மாநிலத்தில்-- தொழில் அமைதிச் சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது.

நேற்று அத்தொழிற்சாலையின் ஊழியர்கள்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்; மற்ருெருவர் படுகாயமடைந்து கவலைக்கிடமான நிலையில் இருக்கிருர்.

பத்ராவதியில் தற்போது நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது; 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது; இது எட்டு நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

கூடுதல் கிராக்கிப் படியும்-- போனசும் கோரி கடந்த சில நாட்களாக இந்தத் தொழிற்சாலை ஊழியர்கள் கிளர்ச்சி நடத்தி வந்தனர்.

நேற்று காலை தொழிற்சாலைக்குத் தொழிலாளர்கள் சென்றபோது அங்கு தொழிற்சாலை கதவடைப்புச் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்து நிர்வாகம் நோட்டீசு போட்டிருப்பதைப் பார்த்து ஆத்திரமடைந்ததாகக் கூறப்படுகிறது.

தொழிலாளர்கள் பின்னர் ஊர்வலம் சென்றனர்; ஊர்வலத்தில் இருந்த ஒரு பகுதியினர் பஸ்களுக்கும்-- வண்டிகளுக்கும் தீவைக்க முயன்றதாகக் கூறப்படுகிறது; போலீசார் தலையிட வேண்டியதாயிற்று.

அங்கு நடந்த கலவரத்தில் சில போலீசுக்காரர்கள் காயமடைந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

வானொலியில் திருக்குறள்

'குறள் அமுதம்' நிகழ்ச்சி ஒலிபரப்பப்படும்

சென்னை, செ. 20—

வானொலியில் நாள்தோறும் காலையில் திருக்குறள் படிக்கப்படும்.

இது பற்றி அனைத்திந்திய வானொலியில் சென்னை நிலைய இயக்குநர் கிருஷ்ணசாமி, நிருபர்களிடம் கூறியதாவது:—

" வானொலியில் 'குறள் அமுதம்' என்ற புதிய நிகழ்ச்சியை சேர்க்கப் போகிருேம்; 5 நிமிட நேரம் நடக்கும் இந்த நிகழ்ச்சி, நாள்தோறும் உண்டு.

திருவள்ளுவரின் திருக்குறளிலிருந்து, நாளும் ஒரு செய்யுள் படிக்கப்படும்-- அதற்கான விளக்கமும் கூறப்படும்; தமிழ்ப் புலவர்கள் இந்த விளக்கத்தைச் சொல்வார்கள்.

நாள்தோறும் காலையில் 6–10 மணிக்கு, 'குறள் அமுதம்' ஒலிபரப்பப்படும்.

சென்னை, திருச்சி-- பாண்டிச்சேரி வானொலி நிலையங்களில் இதைக் கேட்கலாம்.

'குறள் அமுதம்' நிகழ்ச்சி வருகிற நவம்பர் மாதம் 5-ந் தேதி முதல் ஒலிபரப்பாகும்.

இலங்கைத் தமிழர் உரிமைப் போர்

அக். 2-ம் நாள் முதல் கட்டம்

ஒத்துழையாமை இயக்கம் தொடங்கக் கூட்டணியினர் தீர்மானம்

கொழும்பு, செப். 20—

இலங்கையிலுள்ள தமிழர்கள் மொழி உரிமைக்காகவும்– மற்ற உரிமைகளுக்காகவும் நடத்தும் போராட்டத்தின் முதல் கட்டம் அக்டோபர் 2-ந் தேதி தொடங்கும்.

முதலில் ஒத்துழையாமைப் போராட்டம் நடைபெறும்; பிறகு சட்டமறுப்புப் போராட்டம் நடைபெறும்; இதற்கான தேதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

போராட்ட விவரங்களை மக்களுக்கு விளக்குவதற்காகச் செப்டம்பர் 30-ம் நாளன்று தமிழர்கள் வாழும் பகுதிகளில் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தப்படும்.

இலங்கையிலுள்ள தமிழர்களின் உரிமையைப் பறிக்கும் வகையில், இலங்கை அரசாங்கம் புதிய அரசியல் சட்டம் கொண்டு வந்திருக்கிறது; இதனை எதிர்த்துப் போராடுவதற்காக இலங்கைத் தமிழர் கட்சிகள் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்திருக்கின்றன.

இந்தக் கூட்டணியின் கூட்டம், இலங்கையிலுள்ள மட்டிகோலா என்ற இடததில் கடந்த திங்கட்கிழமை நடந்தது.

இலங்கை நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர் தேவநாயகம் இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்குத் தமிழர் கட்சித் தலைவர் செல்வநாயகம தலைமைதாங்கினர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

இலங்கை அரசாங்கத்தை எதிர்தது, அடுத்த அக்டோபர் மாதம் 2-ந் தேதி முதல் 'ஒத்துழையாமை இயக்கம்' நடத்துவோம்; அதைத் தொடர்ந்து வரிகொடா போராட்டம் நடத்தப்படும்; இதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

போராட்டத் திட்டத்தை மக்களுக்கு விளக்குவதற்காகத் தமிழர் வசிக்கும் பகுதிகளில் வருகிற 30-ந் தேதி பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தப்படும்.

வருமானங்களுக்கும் உச்ச வரம்பு?

புதுடில்லி, செப். 20—

" எல்லாவகைப்பட்ட தனியார் வருமானங்களையும் ஒழுங்குபடுத்துவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

" நில உச்சவரம்பு --- நகர சொத்து உச்சவரம்பு ஆகியவற்றுடன், கூலி--, ஊதியம்-- சொத்து-- விலைகள் ஆகியவைகளைக் கட்டுக்கோப்பாக இணைக்கும் ஒரு கொள்கையை வகுக்க அரசு எண்ணியிருக்கிறது"

என்று தலைமைச்சர் இந்திரா காந்தி கருத்தறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சிம்சன் தொழிலாளருக்கு முதலமைச்சர் நல்லுரை

சமரசத் திட்டத்தை ஏற்று' அனைவரும் வேலைக்குத் திரும்புமாறு வேண்டுகோள்

சென்னை, செப். 20—

" புதிய சமரசத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு சிம்சன் நிறுவனத்தைச் சேர்ந்த எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்புவதே சிறப்புடையதாகும் "

என்று முதலமைச்சர் கலைஞர் நேற்று செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுக் கூறினர்; இதுகுறித்துச் செய்தியாளர்களிடம் அவர் விளக்கியதாவது:--

" சிம்சன் பிரச்சினைபற்றித் தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன் அவர்களுடன் வி. பி. சிந்தன் பேசினர்; அதன் பிறகு ஹண்டே எம்.எல் ஏ. என்னுடனும்— அமைச்சர் என். வி. நடராசன் அவர்களுடனும் பேசினர்; அதையொட்டி சிம்சன் நிறுவன அதிபர் சிவசைலத்தையும் அழைத்துப் பேசினேம்.

ஏற்கனவே நான் கூறியுள்ளபடி காவல் துறையினரால் நடத்தப்படும் வழக்குகள் தனியாக நடத்தப்படும்; அது தவிர, தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட 184 பேர் மீதுள்ள நிர்வாகிகள் விசாரணையும் நடைபெறும்; அதுவரையில் வெளியில் இருப்பவர்களான 380 பேருக்கும் முழு ஊதியம் தரப்படும்.

காவல் துறையினரால் நடத்தப்படும் வழக்கு விசாரணைக்குத் தனி நீதிமன்றம் ஏற்படுத்தப்படும்; அந்த வழக்கு முடியும் வரையில் முழுச் சம்பளம் கொடுக்கப்படும என்று கூறியிருக்கிறேன்; அதைத் தொடர்ந்து சிந்தனும்-- ஹண்டேயும் எங்களிடம் பேசியதிலிருந்து விசாரணைகள் விரைவில் முடிவடைய வேண்டுமென்பதை வலியுறுத்தினர்கள்.

அதபற்றி நிர்வாகிகளுடன் பேசி 184 பேர் மீதுள்ள நிர்வாக விசாரணையை 45 நாட்களுக்குள் முடித்து விடுவது என்றும், அதற்கிடையே 15 நாட்களுக்கு ஒரு முறை விசாரணையின் முன்னேற்றம் பற்றி நிர்வாகிகளுடன் தொழிலாளர் நல ஆணையர் கலந்துபேசி பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

45 நாட்களுக்குள் விசாரணை முடிந்து நிர்வாகம் எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்

(5-ம் பக்கம் பார்க்க)

இரயில்வே தொழிலாளர்

வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்றனர்

போராட்டக் குழு முடிவு

இரயில்வேத் தொழிலாளர்களின் (டிரைவர்கள்-- பயர்மென்கள்) வேலைநிறுத்தம் திரும்பப் பெறப்பட்டுவிட்டது.

திரு. எம். ஆர். சபாபதி தலைமையில் நடைபெற்ற போராட்டக் குழுக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

தென்னிந்திய இரயில்வேயில், மொத்தம் 6,712 டிரைவர்களும்-- பயர்மென்களும் இருக்கிருர்கள்; அவர்களில் ஏறத்தாழ 4,700 பேர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்; இதனுல், இரயிலை ஓட்ட இராணுவம் வரவழைக்கப்பட்டது.

இதற்கிடையில், 'வேலைநிறுத்தம் திரும்பப் பெறப்பட்டுவிட்டது' என்று இரயில்வேத் துறையினர் சில நாட்களுக்கு முன்பு அறிவிப்பு வெளியிட்டனர்; அதைத் தொடர்ந்து 2,200 பேர் வேலைக்குத் திரும்பினர்; மீதி 2,500 பேர் நேற்றுவரை வேலைக்கு வராமல் இருந்தனர்.

இப்போது, வேலை நிறுத்தம் அதிகாரபூர்வமாகத் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது.

வேலை நிறுத்தம் நடைபெற்ற 6 வட்டாரங்களிலும் முழு அளவில் இரயில் போக்குவரத்து ஏற்பட்டுவிடும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (கீ, இராயப்பேட்டை ... சென்னை-14) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

அண்ணு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

22—9—72

திருவம்பநல்லூர்

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிககு அண்ணு அரங்கில்; வரவேற்புரை: வை. சண்முகம்; தலைவர்: என். அசோகன்; சிறப்புரை: அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், கு. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ., சு. பத்மநாபன், எஸ் ஆர். இராதா எம்.சி., என். செல்வதுரை, கே. தங்கராசு, ஜி. கலியமூர்த்தி, என். சஞ்சீவி நாதன், வி. சின்னபிள்ளை, எம். கலியமூர்த்தி, அ.குழந்தைவேலு, எஸ்,எஸ். வாசன், கே. முதது சாமி, கே.கே. குஞ்சிதபாதம, ஆர். சின்னதம்பி, கோ. மாரி முத்து, சு. இராமலிங்கம், ஏ.பி. தம்பி. (பந்தநல்லூர் டி. ஆர். தட்சிணமூர்த்தி குழுவினர் நாதசுர இசை வழஙகுவர்.)

கூத்தாநல்லூர்

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிககு வானொலித் திடலில்; தலைவர்: கே.எச. அப்துல் அக்கீம்; பேசுவோர்: கேரளசுந்தரம் எம்.சி., கு. பாலகிருட்டினன் எம்.எல்.ஏ., ஏ.எம்.ஏ. இரகீம், இரெ. தென்னவமணி, வி.ஏ.எம். ஜெகபர்தீன், கோ. சோமசுந்தரம, டி.எம். பசீர் அகமது மற்றும் பலர்.

உறையூர்

அண்ணு அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு போலீசு நிலையம் அருகில்; தலைவர்: ஜே. அமானுல்லா; பேசுவோர்: நன்னிலம நடராசன், எம்.எஸ். வெங்கடாசலம், வி. கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ., எஸ்.ஏ.ஜி. ராபி, எம்.எஸ். மணி, ஆர். நாகசுந்தரம், எம். நடராசன், திருச்சி சௌந்தரராசன், த. செவந்திலிங்கம், பி. ஷர்புதீன், எம்.எஸ்.ஏ. அஜீஸ், பி. மொய்தீன் சா, ஜே. அமீர்ஜான், கே. மஜீத் மற்றும் நகரமன்ற உறுப்பினாகள்.

நிகழ்ச்சிகள்

சேலம்-2 அண்ணு பிறந்தநாள் விழாக குழுச் சார்பில; 22 9—72 மாலை 6-30 மணிக்கு நாதசுர இசை; வரவேற்புரை: க. அன்புமணி; சிலம்புப் பட்டிமன்றம்—நடுவர்: மேலவைத் துணைத் தலைவா ம.பொ. சிவஞானம்; பொருள்: 'கோவலன் உள்ளத்தில் மிகுதியும் இடம் பெற்றவள்'--'கண்ணகியே' என்ற தலைப்பில் பேசுவோா: கோ.செ. நாராயணசாமி, க. பழனிச்சாமி, கவிஞர் முருகு; 'மாதவியே' என்ற தலைப்பில் பேசுவோா: கு.ப. கணேசன், புலவர் பெ. வேலு, விசயராகவன; நன்றியுரை: இரா. இராகவன்.

மீன்வளத்துறை ஆலோசனைக் கூட்டம்

அமைச்சர் சத்தியவாணிமுத்து கலந்துகொளவார்

சென்னை, ஏப். 20—

மீன்வளத்துறை தொடர்பான வேறு குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், செப். 25-ம் நாள் உதகைக்குச் செல்கிருர்.

இரண்டு, வேறு பல நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்துகொண்டுவிட்டு, அக். 2-ம் நாள் காலை சென்னை திரும்புகிருர்.

வேலூரில் அமைச்சர் என். வி. நடராசன்

வேலூா, செப். 20—

சென்ற வெள்ளிக்கிழமை மாலை வேலூா நகராட்சி மன்றச் சாாபில அமைச்சர் என். வி. நடராசன் அவர்கட்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

நகராட்சித் தலைவர் மா. பா. சாரதி எம.எல.ஏ. வரவேற்பு இதழை வாசித்தளித்தார்.

வரவேற்புக்கு அமைச்சர் நன்றி தெரிவித்துப் பேசுகையில், 'நகராட்சிகளில் கட்சி வேறுபாடு இடம கூடாது' எனறு வலியுறுத்தினர்.

பின்னர் நடந்த அண்ணு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் என். வி. என். கலந்து கொண்டார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களுககு அனுப்புவதுடன், முதலமைசசருடைய பரிசீலனைககு விடப்பட வேண்டுமென்றும முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இதை சிமசன் தொழிற் சங்கத்தினா் ஏற்றுககொணடு எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்புவதே சிறப்புடையதாக இருக்குமெனறு நான் கருதுகிறேன்."